கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி
முன்னிலை : திருமதி.R.சுஜாதா, B.Sc., L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி
2024ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.03/2021 இன் அ.வ.எண்.330/2021

1. முத்துசாமி
2. லட்சுமி
3. ராதாமணி
4. அம்சவேணி ... மனுவாதிகள் / வாதிகள்

/ எதிர் /

பி.முத்துசாமி ... எதிர்மனுவாதி/ பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 29.08.2024 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பாலசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும்....

ஆணையுரை

தாவா சொத்தில் எதிர்மனுவாதியோ அல்லது அவர் உள்ளிட்ட ஆட்கள் வகையறா பேர்களோ மனுவாதி உரிமை பாத்தியத்திற்கு இடையூறும் செய்யாமல் இருக்கும் பொருட்டு ஒரு இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் இந்த மனு மீதான விசாரணை முடியும்வரை ஒரு தற்காலிக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனு சங்கதியின் சுருக்கம் :

இம்மனுவில் மனுவாதிகள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் ஆவர். பாகபத்திரமானது தாவாச் சொத்தில் குறிப்பிட்டுள்ள வண்டித்தடமானது

க.ச.எண்.479/1, 481/3, 481.6, 481/5, 484/3 ஆகிய நிலங்களுக்கு பொதுவானதாகும். அந்த வண்டித்தடமானது அருகில் அதனைச் சுற்றியுள்ள அனைத்து நில உரிமையாளர்களுக்கும் சொந்தமானதாகும். மேலும் 40 வருடங்களுக்கு மேலாக அவரவர் நிலங்களுக்குச் செல்லும் தண்ணீர் குழாய்கள் இந்த வண்டித்தடத்தில்தான் அமைக்கப்பட்டுள்ளது. 15 வருடங்களுக்கு முன்பு துளையில் நீர்பாய்ச்சும் பாசனத்திற்காக சிமெண்ட் பைப்புகளை அகற்றி அதற்குப் பதிலாக பிவிசி பைப் பொருத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும் தாக்கல் செய்யப்பட்ட பின்பும் பிரதிவாதி வண்டித்தடத்தை பயன்படுத்துவதில் மிகுந்த இடையூறு செய்து வருகிறார். வாதிதான் பிரதிவாதிகளுக்கு இடையூறு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். அதனால் தாவாச் சொத்தில் மனுவாதியின் சுவாதீனத்தில் எதிர்மனுவாதி எந்த இடையூறும் செய்யாவண்ணம் ஒரு தற்காலிக உறுத்துக் கட்டளை பரிகாரமும் மற்றும் தற்காலிக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரமும் மனுவாதியால் கோரப்பட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுவாதி தாக்கல் செய்துள்ள எதிருரை சங்கதியின் சுருக்கம்</u> :

க.ச.எண்.481 மற்றும் 482 பிரதிவாதிக்கு முழுமையாக பாத்தியப்பட்டது. தற்போது அந்த சொத்தானது 3ம் நபருக்கு விற்கப்பட்டு விட்டது. பிரதிவாதிகள் வாதி தாத்தாவின் உடன் பிறந்தவர்களாவர். பிரதிவாதிகள் 1 மற்றும் 2 ன் வாரிசுகள்தான் பிரதிவாதிகள் 3 மற்றும் 4. அவர்களுக்கு பிரதிவாதியின் சொத்தின் வழியாகச் செல்லும் வழித்தடத்தில் எந்த பாத்தியமும் இல்லை. கடந்த 20.11.2021 பிரதிவாதிகள் எனது சொத்திற்குள் நுழைந்து புதிய வண்டித்தடத்தை அமைக்க முயற்சித்து பிரதிவாதி அதை தடுத்துவிட்டதாகவும் மேலும் வண்டித்தடத்தில் வாதிகளுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றும் ஆகவே மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

4) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

6) **பிரச்சினை** :

மனு மற்றும் எதிருரையில் கண்டுள்ள சங்கதிகள் மற்றும் இருதரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாய்மொழி வாதங்களை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்தது. பாகப் பத்திரப்படி மனுவாதிக்கும் எதிர்மனுவாதிக்கும் பாத்தியப்பட்ட வண்டிப்பாதையில் பிரதிவாதி பல்வேறு இடையூறுகள் செய்து வருவதாகவும் அவ்வாறு செய்யாமல் இருக்கும்பொருட்டு இந்த மனுவை தாக்கல் செய்திருப்பதாக வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) எதிர்மனுதாரர் தரப்பில், பாகப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது போல் வண்டித்தடத்தில் வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் சமமான உரிமை உள்ளது என்றும் வாதிதான் பிரதிவாதி மற்றும் அருகில் உள்ள நில உரிமையாளர்களின் சுவாதீனத்தில் அடிக்கடி இடையூறு செய்து வருவதாகவும் இடைக்கால தற்காலிக உறுத்துக்கட்டளை கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும் இந்த மனுவாதிதான் எதிர்மனுவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் அத்துமீறி நுழைந்து வீண் தகராறுகள் செய்து வருகிறார் என்றும் எனவே, மனுசெலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிர்வாதம் வைக்கப்பட்டுள்ளது.

8) இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்ததில் மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள வண்டித்தடமானது வாதிக்கும் பிரதிவாதிக்கும் பொதுவானது என்றும் வாதியானவர் தனக்கும் பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட வண்டித்தடத்தில் பிரதிவாதி அடிக்கடி இடையூறு விளைவிக்கிறார் என்பதை நிரூபிக்கும் எந்தவிதமான ஆவணங்களையோ, சாட்சியமோ தாக்கல் செய்யவில்லை. மேலும் பிரதிவாதி செய்யும் இடையூறுக்கு எதிராக

காவல்நிலையத்தில் மனுதாரர் புகார் அளித்ததாக தெரியவில்லை.

9) மேலும், அசல் வழக்கை பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள் இம்மனுவில் கோரியுள்ள பரிகாரத்தையே வழக்கின் பரிகாரமாக கோரியுள்ளனர். ஆகவே, மனுதாரர் இம்மனுவில் கோரியுள்ள பரிகாரத்தை வழங்கினால் அசல் வழக்கை முடிவுசெய்வதுபோல் அமைந்துவிடும். ஆகவே, இந்நிலையில் இம்மனுவை அனுமதிக்க போதிய முகாந்திரம் இல்லை.

முடிவில், தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்ததை 2024ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/.....ஆர்.சுஜாதா
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

<u>மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :

– இல்லை –

ஒம்/.....ஆர்.சுஜாதா
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

அசல் / வரைவு ஆணையுரை
ஐ.ஏ.03/2022இன் ஓ.எஸ்.330/2021
நாள் : 30.08.2024
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.